பக்கங்கள் 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் - 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை 30.12.2025 கதிர் 051

## இது ரகசியம் அல்ல!

என்பிபி ஆளும்தரப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றில் பாதீடுகள் 2➤

சூறாவளியை எதிர்கொள்ள போதுமான நடவடிக்கை எடுக்கத் தவறிய

# ஆளும்தரப்புக்கு எதிராக ஜனவரி 15க்குள் வழக்கு

### சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

உரிய நேரத்தில் பொது மக்களுக்கு எச்சரிக்கை வழங்கத் தவறியதுடன் போதுமான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புக்களைக் குறைக்க ஆளும்தரப்பு தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டி உயர் நீதிமன்றத்தில் 2026 ஜனவரி 15க்குள் மனு தாக்கல் 2➤

## பல்வேறு சேவைகளும் திடீரென அத்தியாவசியம் என அறிவிப்பு



இலங்கையில் பல்வேறு சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அரசுத் தலைவர் அநுரகுமார அறிவித்துள்ளார். இதற்கான அரசிதழ் நேற்று வெளியிடப்பட்டது. 'தித்வா' பேரிடரின் பின்னரான காலத்தில் இந்தச் சேவைகள் திடீரென அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், எரிவாயு விநியோகம் 2➤

# மக்களின் ஜனநாயக உரிமையை இல்லாதொழிக்கக் கடும் முயற்சி

### ஆளும்தரப்பு மீது எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதழொழிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முயற்சித்து வருகின்றது. ஜனநாயகத்துக்கான வெளிப்படை தன்மையை இல்லாமலாக்குவது ஆளும்தரப்பின் பணியல்ல என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக் கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பொலன்னறுவை மாவட்டம், அரலகங்வில பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ஷரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆளும்தரப்பிடம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொலைநோக்குப் பார்வையும், திட்ட வரைபடமொன்று காணப்படுவதாகத் தெரியவில்லை. இதை விடுத்து ஆளும்தரப்பு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதழொழிப்பதற்கு முயற்சித்து வருகின்றது. ஜனநாயகத்துக்கான வெளியைச் சுருக்குவது ஆளும்தரப்பின் பணியல்ல. 6➤

## ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை கட்டுப்படுத்த ஜனவரிக்குள் சட்டம்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு சட்ட வரைவு 2026 ஜனவரிக்குள் நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்யப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தெரிவித்துள்ளார்.

"ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு சட்ட வரைவை ஜனவரியில் நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்யவுள்ளோம். இந்தச் சட்டத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் மற்றும் நீண்ட சிறைத் தண்டனைகள் அறிமுகப்படுத்தப்படும்" என்றார் அவர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலக நடவடிக்கைகள் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் தற்போது பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தப்பட்ட கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர், இது விசாரணைக்காக அவர்களை நீண்ட நாள்கள் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கிறது. புதிய சட்டம், அத்தகைய சந்தேக நபர்களை நீண்ட நாள்கள் பொலிஸாரின் காவலில் வைத்து விசாரிப்பதற்கான அனுமதியை வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பிற நோக்கங்களுக்காக இயற்றப்பட்ட சட்டங்களில் தங்கியிருக்காமல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை இலக்காகக் கொண்ட தனியான வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் சமீபத்திய மாதங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களின் செயல்களில் கூர்மையான அதிகரித்துள்ளன, குறிப்பாக சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கொலைகள் என்பன அதிகரித்துள்ளன. இருப்பினும், தற்போதுள்ள சட்ட விதிகளில் பல்வேறு வகையான இடைவெளிகள் உள்ளன, அவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை திறம்பட கையாள்வதை கடினமாக்குகின்றன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாட்டிற்கு வெளியில் இருந்து இத்தகைய குற்றங்களை இயக்கும் நபர்களைத் 2➤

## ஐ.நாவை நாடவுள்ள வேடர்கள்

இலங்கையில் ஆளும்தரப்புக்கள் பழங்குடிச்சமூகமான வேடர்சமூகத்தின் உரிமைகளை அங்கீகரிக்கவில்லை என்பதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையை அணுகவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது என்று வேடர் சமூகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பழங்குடி மக்கள் தொடர்பான ஐ.நா. பிரகடனங்களில் இலங்கை கையொப்பம் இட்டிருந்தாலும் தமது உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை என்று வேடர்களின் தலைவரான உருவரிகே வன்னில அத்தோ தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'தி டெய்லி மோர்னிங்' 2➤

## அரசமைப்புச் சபை உறுப்பினர் நியமனத்தில் கவனம் தேவை

### சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

அரசமைப்புச் சபையில் தற்போது பணியாற்றும் மூன்று குடிசார் சமூக உறுப்பினர்களின் பதவிக் காலம் 2026 ஜனவரியில் முடிவடைய உள்ளதால், புதிய குடிசார் சமூக பிரதிநிதிகளை நியமிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) கோரிக்கை விடுத்துள்ளது.

அரசுத் தலைவர், 2➤

## வாகன மின்னேற்று நிலையங்களை நிறுவ சீன உதவியை நாடும் விஜித



மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றுவதற்கான நிலையங்களை (Charging Points) இலங்கை முழுவதும் நிறுவதற்கு உதவுமாறு சீன அரசாங்கத்திடம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

அயலுறவுத்துறை அமைச்சில் சீனத் தூதுவர் கீ சென்ஹொங் (ஞை ணுாநபொழபெ) உடன் நேற்று நடந்த சந்திப்பின் போதே அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

சீனா உள்ளிட்ட உலக சந்தையிலிருந்து இலங்கை அதிகளவில் மின் வாகனங்களை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. எனவே, மின்னேற்று நிலையங்களின் தேவை அதிகரித்துள்ளது. இத்தகைய நிலையங்களை சீன ஆளும்தரப்பின் நன்கொடையாக நிறுவுவதற்கான சாத்தியங்கள் குறித்தும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அதிகளவிலான மின்சாரப் பேருந்துகளை (நுடநஉவசைஉ டீரளநள) இறக்குமதி செய்வதற்கு ஆளும்தரப்புத் திட்டமிட்டுள்ளதாக சீனத் தூதுவரிடம் தெரிவித்த அமைச்சர், அதற்கான தயார்ப்படுத்தல் இல்லாமல் மின்சார வாகனங்களை நோக்கிச் செல்வது முடியாத காரியம் என்பதையும் தெளிவுபடுத்தினார். 6➤

## வீடு கழுவும் நிதியைக் கேட்டு கொத்மலையில் போராட்டம்

'தித்வா' புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஷரூ. 25 ஆயிரம் நிதி இன்னமும் தமக்கு வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொத்மலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த கிராம மக்கள் நேற்று கொத்மலை பிரதேச செயலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அரச பணியாளர்களுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. கரகஸ்தலாவ சுகதாராம விகாராதிபதி கலுகல காஷ்யப தேரரும் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக அங்கு வந்திருந்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்வதற்கான அரசாங்க கொடுப்பனவு இன்னும் செலுத்தப்படவில்லை என்று அவரும் குற்றஞ்சாட்டினார்.

மண்சரிவு ஏற்படக்கூடிய கொத்மலை கிழக்குப் பகுதியில் உள்ள கிராம சேவையாளர்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கள் பிரிவுகளுக்குச் செல்லத் தவறிவிட்டனர் என்று குடியிருப்பாளர்கள் மேலும் குற்றம் சாட்டினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவியை 2➤

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க் கட்சிகளால் தோற்கடிக்கப்பட்டு வருவது பற்றி இந்தப் பத்தியில்

பல தடவைகள் கூறியிருக்கின்றேன். கொழும்பு மாநகர சபையின் பாதீடுகூட இவ்வாறு தோற்கடிக்கப்பட்டிருந்தது. அதனை மீண்டும் நாளை முன்வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது.

பிரதேச சபைகளிலோ நகர அல்லது மாநகர சபைகளிலோ பாதீடுகள் தோற்கடிக்கப்படுவதால் அதன் ஆளும்தரப்புகளுக்கு உடனடியாக எந்தப் பாதிப்பும் இல்லை. சபைகளில் எந்தக் கட்சி ஆளும்தரப்பாக இருந்தாலும் பாதீடுகள் தோற்கடிக்கப்படுவதால் முதல் இரு வருடங்களுக்கும் அதனால் பிரச்சினை இல்லை. தவிசாளர்கள் அல்லது முதல்வர்கள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பாதீட்டை இரண்டு வருடங்களுக்குத் தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருக்க முடியும்.

என்றாலும், உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்படும் இத்தகைய தோல்விகள் பொதுவாக, கொழும்பில் ஆட்சியிலிருப்பவர்களின் மக்கள் செல்வாக்குச் சரிவதன் அறிகுறியாகவே பார்க்கப்பட்டு வருகின்றது. 2015இல் ஆட்சியை இழந்த ராஜபக்சக்கள் 2019இல் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியைப் பிடித்தார்கள் என்பது இங்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய உதாரணம். தற்போதைய ஆளும்தரப்பு அதற்குத் தலைகீழாக அரசுத் தலைவர், நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்ற பின்னரே உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைப் பிடித்தது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கும் இடையிலேயே ஆளும்தரப்பு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது என்பதான கருத்துக்கள் அப்போதே வெளிப்பட்டன. அதற்குக் காரணம் நாடாளுமன்றத் தேர்தலில் என்பிபி ஆளும்தரப்புப் பெற்ற வாக்குகளைவிட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பல லட்சம் வாக்குகள் குறைவாகப் பெற்றதே. என்றாலும் அப்போதிருந்த என்பிபி அலையைப் பயன்படுத்தி தொத்துப்பறியில் இருந்த பல சபைகளை ஆளும்தரப்பு கைப்பற்றியிருந்தது. ஆனால், இப்போது எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சபைகளில் என்பிபியை வீழ்த்தும் இடத்திற்கு வந்திருப்பது, என்பிபியின் செல்வாக்குச் சரிவைக் காட்டுகிறது என்பதான கருத்துக்களை வலுப்பெற வைக்கிறது.

அந்த வகையில் உடுநுவர பிரதேச சபையில் என்பிபியின் பாதீடு நேற்று இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. பாதீட்டுக்கு ஆதரவாக 18 வாக்குகளும் எதிராக 20 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

பிரதேச சபைகளில் மட்டுமல்லாது பொதுமக்கள் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடிய மற்றொரு தளமாகக் கருதப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களிலும் தற்போது என்பிபி ஆளும்தரப்பு தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நடைபெற்ற தேர்தலில் குண்டசாலை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் (ஆீஊளு) புதிய பணிப்பாளர் குழுவிற்கான தேர்தலிலும் என்பிபி படுதோல்வியைச் சந்தித்துள்ளது. பணிப்பாளர் சபையின் மொத்தமுள்ள 7 இடங்களையுமே “கூட்டு எதிர்க்கட்சி” கைப்பற்றியுள்ளது.

மெனிக்கின்னவில் உள்ள குண்டசாலை கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பைத் தொடர்ந்து திஸ்ஸ உடகம தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலுக்கு கண்டி மாவட்டத்திற்கான கூட்டுறவு மேம்பாட்டு உதவி ஆணையர் தலைமை தாங்கினார்.

குறிப்பிடத்தக்க வகையில், தேசிய மக்கள் சக்தியின் (ழீ) எந்த வேட்பாளராலும் குழுவில் இடம்பெற முடியவில்லை.

வெற்றி பெற்ற கூட்டு எதிர்க்கட்சி கூட்டணியில் ஐக்கிய மக்கள் சக்தி (ளுதுடீ), இலங்கை பொது ஜன பெரமுன (ளுடீ) மற்றும் மக்கள் அதிகாரம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர்.

மத்தியில் ஆளும்தரப்பாக என்பிபி அதிகாரத்தில் இருக்கும்போதே கூட்டுறவுச் சபைத் தேர்தல் ஒன்றில் இவ்வாறு அனைத்து ஆசனங்களையும் இழந்திருப்பது பெரியதொரு அரசியல் நகர்வாகவே தெற்கில் பார்க்கப்படுகின்றது. ஆளும்தரப்பு மீது மக்களுக்கிருந்த கவர்ச்சி மங்கத் தொடங்கி, எதிர்ப்பு வலுப்படுவதையே இது உணர்த்தி நிற்கின்றது என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றார்கள். அதிகாரத்திற்கு வந்து ஒரு வருட காலத்திலேயே ஆளும்தரப்பு ஒன்று இவ்வளவு தூரம் அரசியல் பின்னடைவைச் சந்திப்பது, எஞ்சியுள்ள ஆட்சிக் காலத்தில் அதற்குப் பெரும் சவாலான சூழலையே தோற்றுவிக்கும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

ஆளும்தரப்பு தனது செல்வாக்கை மெல்ல மெல்ல இழந்து வரும் நிலையிருந்தாலும் அதனை தமக்கான வாக்குகளாகத் திரட்டிக்கொள்ளக்கூடிய கவர்ச்சி எதிர்க் கட்சிகளில் எவற்றுக்கும் இல்லாதிருப்பதே இப்போதிருக்கும் பலவீனம் என்றும், அதுவே ஆளும்தரப்புக்கு உள்ள சாதக நிலை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இடிமின்னல்

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்படவுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் தற்போதைய என்பிபி ஆளும்தரப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது.

‘தித்வா’ சூறாவளியின் ஆபத்துகள் குறித்து முன்கூட்டியே பொதுமக்களுக்குத் தெரிவிக்கத் தவறியமை மற்றும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமை ஆகியவற்றுக்காக ஜனவரி 15க்குள் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதங்களும் சொத்துச் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் அழைப்பாளர் சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

ஆளும்தரப்பின் இந்த அலட்சியப்போக்கு பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக இந்த மனுவில் வாதிடப்படவுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் முன்னாள் அரசுத் தலைவர் மைத்ரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தண்டிக்கப்பட்டமை இந்த வழக்கிற்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்படும்.

மேலும், முன்னாள் அரசுத்தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் தூரநோக்கற்ற ஆட்சியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் ஆதாரங்களாக முன்வைக்கப்படவுள்ளன.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உறவினர், ஒரு மதத் தலைவர் மற்றும் ஒரு தொழிலதிபர் ஆகியோர் சாட்சிகளாகப் பெயரிடப்பட உள்ளனர்.

அரசுத் தலைவரின் செயலாளர், வளிமண்டளவியல் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்படவுள்ளனர்.

இந்த மனு தற்போது தயாராக இருப்பதாகவும், ஜனவரி 15க்கு முன்னதாக இது உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## பல்வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அல்லது பகிர்ந்தளிப்பு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் விதிகளுக்கமைய, அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள், பராமரிப்பு நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் இதுபோன்ற நிறுவனங்களில் நோயாளர்களைப் பராமரித்தல், அனுமதித்தல், பாதுகாத்தல், உணவளித்தல் மற்றும் சிகிச்சையளித்தல் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

நோயாளர் காவு வண்டி சேவைகள், பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்துக்கான பொது போக்குவரத்து சேவைகள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புடன் தொடர்புடைய அனைத்து சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான சேவைகள், அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் களமட்ட அதிகாரிகளால் ஆற்றப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிச் சேவைகள், காப்புறுதி சேவைகள், உள்ளூராட்சி நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் நீர் வழங்கல், மின்சாரம், கழிவுநீர் அகற்றும் முறைமை, தீயணைப்பு, கழிவு சுத்திகரிப்பு மற்றும் குப்பை அகற்றுதல் உள்ளிட்ட அனைத்து சேவைகள் என்பனவும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன

## ஐ.நா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆங்கிலப் பத்திரிகைக்குப் பேட்டியளித்த அவர், உலக பழங்குடி மக்கள் தினத்தை முன்னிட்டு ஒகஸ்ட் 9 அரசுத் தலைவர் அநுரகுமார தமது கிராமத்திற்கு வந்திருந்தார் என்றும், பழங்குடி சமூகம் எதிர்கொள்ளும் நீண்டகால பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையான சட்டத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர்களுக்கு உறுதியளித்திருந்தார் எனவும் கூறினார்.

அரசுத் தலைவர் இந்த உறுதிப்பாட்டை நாடாளுமன்றத்தில் மீண்டும் வலியுறுத்தியிருந்தாலும், இதுவரை அத்தகைய திருத்தங்கள் எதுவும் வரைவு செய்யப்படுவதற்கோ அல்லது முன்வைக்கப்படுவதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதான அறிகுறியும் இல்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

“கடந்த காலங்களில் அடுத்தடுத்து வந்த ஆளும்தரப்புக்களுடன் எங்கள் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டன, ஆனால், அவை அனைத்தும் தீர்வுகளை வழங்கத் தவறிவிட்டன. தொடக்கத்தில் தற்போதைய ஆளும்தரப்பு மீது எங்களுக்கு ஓரளவு நம்பிக்கை இருந்தது, ஆனால், இப்போது அது முந்தைய நிர்வாகங்களைப் போலவே அதே பாதையைப் பின்பற்றுமோ என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். எங்கள் முழு வாழ்க்கை முறையும் காடுகளிலிருந்து பிரிக்க முடியாதது. எங்கள் வாழ்வாதாரம், கலாசாரம், கல்வி மற்றும் மத நடைமுறைகள் அனைத்தும் காடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. வனப்பகுதிகளுக்குள் நுழைவதற்கான தற்போதைய கட்டுப்பாடுகள் எங்கள் அடையாளத்தை அச்சுறுத்துகின்றன.”

பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஐ.நா. பிரகடனங்கள் உள்ளன, இலங்கை அதில் கையொப்பமிட்டும் உள்ளது, ஆனாலும் எமது உரிமைகள் இன்னும் மதிக்கப்படவில்லை என்றும் வன்னிலா அத்தோ சுட்டிக்காட்டினார். தேசிய அளவில் பழங்குடி உரிமைகள் போதுமான அளவு பாதுகாக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். “ஆளும்தரப்புக்கள் எங்கள் உரிமைகளை தொடர்ந்து புறக்கணித்தால், நாங்கள் ஐ.நா. விடம் செல்லவேண்டியிருக்கும். இருப்பினும், இந்த ஆளும்தரப்பு ஏதாவது செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்,” என்று அவர் மேலும் கூறினார்.

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்புச் சீர்திருத்த அமைச்சகம், சிறப்பாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், வேடர் சமூகத்திற்கான நீடித்த தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டங்களை அறிவித்தது. ஆனால் அது சட்டமாக்கப்படவில்லை.

இலங்கையின் வேடர்கள் கிமு 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இலங்கையில் வசித்து வருகின்றனர் என்று நம்பப்படுகிறது. காலப்போக்கில் பலர் பரந்த மக்கள் தொகையில் அவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தாலும், சமூகத் தலைவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரை நிவர்த்தி செய்தல் அல்லது பூர்வீகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்குதல் உள்ளிட்ட முறையான பிரதிநிதித்துவம் தமக்குக் கிடைக்கவில்லை என்று அவர்கள் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

## ஒழுங்கமைக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தண்டிப்பதில் உள்ள வரம்புகள், நாடு கடத்தல் செயல்முறைகளில் உள்ள தாமதங்கள் மற்றும் குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துக்களைக் கண்டறிந்து பறிமுதல் செய்வதில் உள்ள சிரமங்கள் ஆகியவை தற்போதுள்ள சவால்கள். அவற்றை நிவர்த்தி செய்வதற்காகவே புதிய சட்டத்தின் தேவை உணரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசமைப்புச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர், நாடாளுமன்ற அவைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தில், தற்போதைய குடிசார் சமூகப் பிரதிநிதிகளான பிரதாப் ராமானுஜம், தில்குஷி அனுலா விஜேசுந்தர மற்றும் தினேஷா சமரத்ன ஆகியோர் அரசமைப்புச் சபையில் தங்கள் பதவிக் காலத்தில் பாராட்டத்தக்க சேவையை வழங்கியுள்ளனர் என்று சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 41யு பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அரசமைப்புச் சபை, சுயாதீன ஆணையங்களின் சுயாதீன செயல்பாட்டை உறுதி செய்வதிலும் முக்கிய அரசு நிறுவனங்களுக்கான நியமனங்களிலும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. சுயாதீன ஆணையங்கள், உச்ச நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள், தலைமை நீதிபதி மற்றும் சட்டமா அதிபர் போன்ற உயர் பதவிகளுக்கான நியமனங்களை அரசமைப்பு சபையின் ஒப்புதல் இல்லாமல் செய்ய முடியாது என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பின் பிரிவு 41யு(3)(ந) இன் கீழ், அரசமைப்புச் சபையின் மூன்று குடிசார் சமூகப் பிரதிநிதிகள் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் ஒப்புதலுடன் நாடாளுமன்ற அவைத் தலைவரால் பரிந்துரைக்கப்பட வேண்டும், பின்னர் அரசுத் தலைவரால் நியமிக்கப்படவேண்டும் என்றுள்ளது.

இந்த விடயத்தின் அரசமைப்பு சபையின் கடந்த காலத்தை நினைவுபடுத்தியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், அரசியல் செல்வாக்கைக் குறைத்து சுயாதீன ஆணையங்களை நிறுவும் நோக்கத்துடன் 2001ஆம் ஆண்டு அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மூலம் அரசமைப்புச் சபை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுள்ளது. 18, 19 மற்றும் 20ஆவது திருத்தங்கள் அதன் அதிகாரங்களையும் கட்டமைப்பையும் மாற்றியமைத்தாலும், 21ஆவது திருத்தம் ஒருமித்த கருத்தையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் பரந்த அரசியல் கட்சி பிரதிநிதித்துவத்துடன் அரசமைப்பு சபையை மீண்டும் நிறுவியது.

சட்டத்தின் ஆட்சி, ஆணையங்களின் சுதந்திரம் மற்றும் மூத்த மாநில பதவிகளுக்கான நியமனங்களின் நம்பகத்தன்மை குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ள சட்டத்தரணிகள் சங்கம், புதிதாக நியமிக்கப்படவுள்ள குடிசார் சமூகப் பிரதிநிதிகள் மிக உயர்ந்த நெறிமுறை தரங்களைக் கொண்ட நபர்களாகவும், சமூகத்தால் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், அரசமைப்புச் சபையின் பணிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்யக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிப்பத்தில் அரசுத் தலைவர் நான்குமுறை முன்வைத்த பரிந்துரைகளை அரசமைப்புச் சபை நிராகரித்துள்ளது. இந்த நிலையில், தனக்கு நெருக்கமான, வேண்டிய ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்துவதற்காக அரசமைப்புச் சபையின் குடிசார் சமூகப் பிரதிநிதிகளின் புதிய நியமனத்திற்காக அரசுத் தலைவர் காத்திருக்கிறார் என்கிற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரசமைப்புச் சபையின் தற்போதைய குடிசார் உறுப்பினர்களின் பதவிக் காலம் ஜனவரியில் முடிவடைந்ததும், தமக்குச் சார்பானவர்களை அந்தப் பதவிக்கு நியமிப்பதன் மூலம் தனக்கு வேண்டியவர்களை அரச உயர் பதவிக்கு நியமிக்க அரசுத் தலைவரும் ஆளும்தரப்பினரும் முயற்சிக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை எதிர்க் கட்சிகள் முன்வைக்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே அரசமைப்புச் சபைக்குப் புதிய குடிசார் சமூகப் பிரதிநிதிகளை நியமிக்கும்போது நேர்மையாக நடந்துகொள்ளும்படி சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சட்ட வல்லுநர்கள் உட்பட சிவில் சமூகம் மற்றும் தொழில்முறை அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களைக் கருத்தில் கொண்ட பின்னரே இந்த நியமனங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் சங்கம் மேலும் வலியுறுத்துகின்றது.

## வீடு கழுவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்குமாறு சுற்றறிக்கைகள் இருந்தபோதிலும், கொத்மலை பிரதேச செயலகத்தில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் நடத்தை மிகவும் மெதுவாகவே உள்ளது என்று போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

பிரதேச செயலாளர் இல்லாததால், குழு உதவி பிரதேச செயலாளர் திவங்க தசநாயக்கவை சந்தித்த போராட்டக்காரர்கள், தமது பணியாளர்களால் (6ஆம் பக்கம் பார்க்க.)


JDr
JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மதுபோதையும் பொறுப்பற்ற ஓட்டமும் சமூகம் எதிர்கொள்ளும் பேராபத்து

இலங்கையில் வீதிப் பாதுகாப்பு என்பது இன்று வெறும் போக்குவரத்து ஒழுங்குமுறைப் பிரச்சினை அல்ல் அது மனித உயிர்களை நேரடியாகத் தாக்கும் சமூக அவசர நிலையாக மாறியுள்ளது. இந்த நிலையில், மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் தீவிர அலட்சியமான ஓட்டம் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு போக்குவரத்து சட்டங்களின் கீழ் மட்டுமன்றி, பொருந்தக்கூடிய குற்றவியல் சட்டங்களின் கீழும் இனிமேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல்துறை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கதும், காலத்துக்கேற்ற முடிவுமாகும்.

இந்த அறிவிப்பு திடீரென எடுக்கப்பட்ட ஒன்றல்ல. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு வீதி விபத்துகள் 271 அதிகரித்துள்ளதுடன், உயிரிழப்புகள் 317 வரை உயர்ந்துள்ளன என்பது நிலமையின் தீவிரத்தைக் காட்டுகிறது. குறிப்பாக, விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களில் 31 சதவீதம் பேர் பாதசாரிகள் என்பதும், வீதிப் பாதுகாப்பு எவ்வளவு சமநிலையற்றதாக உள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறது. இவை எண்கள் மட்டும் அல்ல் குடும்பங்களைச் சிதைத்த உயிரிழப்புகளின் மௌன சாட்சிகள்.

### போக்குவரத்து குற்றமல்ல

சிலர் போக்குவரத்து சட்ட மீறல்களை சிறிய குற்றங்களாகவே கருதுகின்றனர். அபராதம் செலுத்திவிட்டு மறந்துவிடக்கூடிய தவறுகள் என்ற மனநிலையே இத்தகைய அலட்சியத்துக்குக் காரணமாக உள்ளது. ஆனால் உண்மையில், ஒரு வாகனத்தை இயக்குவது என்பது ஒரு மனிதனின் உயிரை மட்டுமன்றி, சுற்றியுள்ள பலரின் உயிர்களையும் கையில் வைத்திருக்கும் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை அலட்சியப்படுத்தும் போது, அது குற்றமாக மாறுவது இயல்பானதே.

குறிப்பாக, மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் என்பது தவறுதலாக நிகழும் செயல் அல்ல. மதுபானம் உட்கொள்வதால் தீர்மானிக்கும் திறன், எதிர்வினை வேகம், கவனம் ஆகியவை பாதிக்கப்படும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அதையெல்லாம் அறிந்தும் ஒருவர் வாகனத்தை இயக்குவதைத் தேர்வு செய்கிறார் என்றால், அவர் சமூகத்தையே ஆபத்தில் தள்ளுகிறார். இத்தகைய செயல்களுக்கு கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பழிவாங்கும் நோக்கமல்ல் அது தடுப்புச் செயலாகவும், பொது நலப் பாதுகாப்பாகவும் அமைகிறது.

### கட்டமைப்பு சீர்திருத்தங்கள் அவசியம்

எனினும், கடுமையான சட்ட நடவடிக்கைகள் மட்டுமே வீதி விபத்துகளை முழுமையாகக் குறைக்க முடியாது. அதற்கு இணையாக, கட்டமைப்புச் சீர்திருத்தங்களும் அவசியம். அந்த வகையில், அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள வாகனச் சாரதிகள் உரிமத்திற்கு வழங்கப்படும் 'டிமெரிட் புள்ளி முறைமை' ஒரு முக்கிய முன்னேற்றமாகும். நீண்ட காலமாக பேசப்பட்டும் தள்ளிப்போன இந்த முறைமை, எந்தவித சமரசமுமின்றி நடைமுறைப்படுத்தப்படவேண்டும். தொடர்ச்சியான சட்ட மீறல்கள் செய்தாலும், விபத்து நிகழாத காரணத்தால் தப்பித்து விடலாம் என்ற எண்ணம் முற்றாகக் களைந்திடப்படவேண்டும்.

இலங்கையில் வாகன சாரதியப் பயிற்சி நிலையங்கள் குறித்த கட்டுப்பாடுகள் போதிய அளவில் இல்லாததும் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. மிக எளிதாக சாரதித் தேர்வுகளைத் தாண்டி உரிமம் பெற முடியும் என்ற நிலை, வீதியில் அனுபவமற்ற மற்றும் ஒழுக்கமற்ற சாரதிகளை உருவாக்குகிறது. சாரதி உரிமம் என்பது ஒரு சான்றிதழ் மட்டுமல்ல் அது தகுதி, ஒழுக்கம், சட்ட மரியாதை ஆகியவற்றின் அடையாளமாக இருக்கவேண்டும். அதற்காக, பயிற்சி நிலையங்கள் கடுமையாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும்.

### மறக்கப்பட்ட பாதுகாப்பு அம்சம்

மேலும், வாகன பராமரிப்பு குறித்த கவனமும் அவசியம். தற்போது பெரும்பாலும் புகை வெளியீட்டு பரிசோதனைக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஆனால், பிரேக் அமைப்பு, டயர்கள், விளக்குகள், திசை காட்டிகள் போன்ற அடிப்படை பாதுகாப்பு அம்சங்கள் சரிவரப் பரிசோதிக்கப்படுவதில்லை. முழுமையான வாகன பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வாகன அனுமதிப் பத்திரங்களின் புதுப்பிப்பு, பராமரிப்பை கட்டாயமாக்கும் வகையில் அமையவேண்டும்.

இறுதியில், எந்தச் சட்டமும் மனித சுயக்கட்டுப்பாட்டை மாற்ற முடியாது. பொறுப்புணர்வுடன் ஓட்டுதல், பாதசாரிகளுக்கு மரியாதை, வேக வரம்புகளை மதித்தல், மதுபோதையில் ஓட்டாதிருத்தல் ஆகியவை சட்டப் பிணைப்பாக அல்ல, சமூக ஒழுக்கமாக மாற வேண்டும். விழிப்புணர்வு பிரச்சாரங்கள், கல்வி, பொதுச் சொற்பொழிவுகள் ஆகியவற்றின் மூலம் இந்தப் பண்பாடு வளர்க்கப்பட வேண்டும்.

வீதிப் பாதுகாப்பு என்பது காவல்துறையின் மட்டும் பொறுப்பு அல்ல. அது ஒவ்வொரு ஓட்டுநரின், ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். உயிர்களை அச்சுறுத்தும் ஓட்டத்தை தீவிர குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுப்பதே, வீதிகளில் மனிதத்தையும் பாதுகாப்பையும் மீட்டெடுக்க வேண்டிய அடிப்படைத் தொடக்கமாகும்.

# சூறாவளிகளின் பின்னரான இறப்பு தொடர்பில் அதிக கவனம் தேவை

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

சூறாவளி வீசும் நேரத்தை விட, அது ஓய்ந்த பின்னரான காலப்பகுதியிலேயே அதிகளவான உயிரிழப்புகள் ஏற்படுவதாக அண்மைக்கால ஆய்வு முடிவுகள் தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டி இதனைத் தெரிவித்தார்.

மொனாஷ் பல்கலைக்கழகமானது 2000 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒன்பது நாடுகளில் இடம்பெற்ற சுமார் 15 மில்லியன் மரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விரிவான ஆய்வை முன்னெடுத்துள்ளது.

சூறாவளிக் காற்றின் நேரடித் தாக்கத்தினால் பலியாகும் நபர்களின் எண்ணிக்கையை விட, சூறாவளி ஓய்ந்த பின்னரான காலப்பகுதியில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சூறாவளிக்குப் பின்னர் ஏற்படும் தொற்று நோய்கள், போதிய மருத்துவ வசதியின்மை, வாழ்வாதாரப் பாதிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு சீர்குலைவு போன்ற காரணிகளே இவ்வாறான அதிகப்படியான உயிரிழப்புகளுக்கு வழிவகுப்பதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

"இந்த ஆய்வு முடிவுகளை நாம் பாடமாகக்கொள்ள வேண்டும். சூறாவளி வீசும் போது மாத்திரமன்றி, அது ஓய்ந்த பின்னரும் மக்களின் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்" என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது வலியுறுத்தினார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு




வவுனியா மாவட்ட முன்னிலை சோசலிசக் கட்சி செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளும் சட்டவிரோதக் கைதுகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் நேற்று கொழும்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்திற்குச் சென்று முறையிட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முன்னிலை சோசலிசக் கட்சி செயற்பாட்டாளர் ஜகத் கித்சிறி நவரத்ன டிசெம்பர் 16 மாமடுவ பொலிஸாரினால் எவ்வித நியாயமான காரணமோ அல்லது குற்றச்சாட்டுகளோ இன்றி தன்னிச்சையாகக் கைது செய்யப்பட்டார் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சட்டவிரோதக் கைது நடவடிக்கை, ஜனநாயக ரீதியில் அரசியல் பணிகளில் ஈடுபடும் உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக அந்த கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

முறைப்பாடு அளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் செயற்பாட்டாளர் சந்தன சிறிமல்வத்த, "தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக, பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை நீக்குவதாகவும், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் உறுதியளித்தது. ஆனால், இன்று பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் இன்னும் கொடூரமான சட்டத்தைக் கொண்டுவர ஆளும்தரப்பு முயல்கிறது.

ஜகத் கித்சிறி நவரத்னவின் கைது என்பது தனிப்பட்ட ஒருவரின் உரிமை மீறல் மட்டுமல்ல் இது அரசியல் செய்யும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துத் தெரிவிக்கும் உரிமை ஆகியவற்றின் மீதான தாக்குதலாகும்.

போராட்டங்களில் ஈடுபடுபவர்களை அச்சுறுத்துவது, பொய்க் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்வது மற்றும் அபாண்டமாக வழக்குத் தொடர்வது போன்ற செயல்களில் காவல்துறை தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இச்சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகள் மீது உடனடி விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அரசியல் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

மேலும், அடக்குமுறை சட்டங்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் எனவும், இத்தகைய மனித உரிமை மீறல்கள் இனி நிகழாது என்பதை ஆளும்தரப்பு உறுதிப்படுத்தவேண்டும் எனவும் முன்னிலை சோஷலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

# தோப்பூரில் கரையொதுங்கிய இந்திய ஏவுகணையின் பாகம்





திருகோணமலை தோப்பூர் மற்றும் வெருகல் கடற்பரப்பில் ஏவுகணையின் பாகங்கள் கரையொதுங்கியுள்ளன.

இது தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது. இந்தியக் கொடியுடன் கூடிய இந்த ஏவுகணையின் பாகங்கள் ஞாயிறு மாலை கரையொதுங்கின.

இந்தியாவினால் விண்ணுக்கு ஏவப்பட்ட ஏவுகணை ஒன்றிலிருந்து பிரிந்துச்செல்லும் பாகத்தின் துண்டுகளே, கரையொதுக்கியிருக்கலாம் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

விண்ணுக்கு ஏவப்படும் விண்கலங்களில் இருந்து பிரிந்துச் செல்லும் பாகங்கள் பிராந்திய கடல் எல்லைக்குள் விழும் என இந்தியா ஏற்கனவே அறிவித்திருந்ததாகவும் கடற்படை பேச்சாளர் கூறினார்.

அதன்படி, திருகோணமலையில் கரையொதுங்கியுள்ள ஏவுகணை பாகங்கள் தொடர்பில், இலங்கையின் கடற்படை ஆராய்ந்து, அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரே நாடு ஒரே கட்டணம் ஓட்டோ சாரதிகள் கோரிக்கை



நாட்டில் உள்ள அனைத்து வாடகை முச்சக்கர வண்டிகளுக்கும் பொதுவான கட்டணத்தை அறிமுகப்படுத்துமாறு ஒன்றிணைந்த முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சங்கம் ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது. கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

இதேவேளை, மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் சிலர், போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'உபர்' மற்றும் 'பிக் மீ' செயலிகள் மூலம் போக்குவரத்து சேவைகளை வழங்கும் ஓட்டுநர்களால், தமது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூார் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தரம் 11
தொடக்கம் வரை

காலைக்கதிர்
Kalaikkathir

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்ட தாய்நாட்டுக்கு உதவிகளைப் பெற்றுத் தரும், மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்தக்கூடிய புதிய பயணமொன்றை தொடங்குவதே தற்போதுள்ள தேவை. ஆனால், ஆளும்தரப்பின் இதுவரையான நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதனைக் காண முடியாதுள்ளது.

'தித்வா' சூறாவளிக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களித்த விவசாயம், சேவைகள் துறை மற்றும் தொழிற்துறைகள் சூறாவளிக்குப் பிறகு பல்வேறு கடுமையான அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளன. இந்தத் துறைகளில் பாதிக்கப்பட்டிருக்கும் தரப்பினருக்கு சேவைகளைப் பலப்படுத்தி, அவர்களைப் வலுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

இந்தத் துறைகளில் உள்ளவர்களுக்கும், சுயதொழில் செய்பவர்களுக்கும் உதவி வழங்க ஆளும்தரப்பால் முடியாவிட்டால், அது முழுப் பொருளாதார செயல்முறையையும் பாதிக்கும். அதன் பாதகமான விளைவுகளை நாடு சந்திக்க நேரிடும். உணவுப் பாதுகாப்புக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, ஏற்றுமதித் துறைக்கு, உற்பத்தித்துறைக்கு, சுற்றுலா உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தரவேண்டும். உதவிகளையும் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

இல்லையெனில், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தத் தரப்பினர் பெற்றுத் தரும் பங்களிப்பு குறைந்து விடும். அரச அதிகாரிகளுக்கு அடிபணியாமல் தகுதியானவர்களுக்கு உதவி வழங்குவதே ஆளும்தரப்பின் பொறுப்பாகும். இது தேசிய நிகழ்ச்சி நிரலின் முதன்மை அம்சமாக அமைந்து காணப்பட வேண்டும். வீடுகள், சொத்துக்கள் மற்றும் வணிகங்கள் சேதமடைந்தவர்களுக்கு வாக்குறுதியளித்த உதவியை வழங்குவதைத் தவிர்ப்பதற்கான காரணங்களை ஆளும்தரப்பு தற்போது தேடி வருகிறது. மக்களை ஏமாற்றாது, வாக்குறுதியளித்த உதவிகளை அதே முறையில் வழங்க வேண்டும்.

வெளிநாட்டு பொருளாதார வல்லுநர்கள் நமது நாட்டு மக்களைக் கருத்தில் கொண்டு செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனை ஒத்திவைப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது, மூன்றில் இண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஆளும்தரப்பினரும் அரசுத் தலைவரும் இதைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர்.

ஆளும்தரப்பு சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 200 மில்லியன் டொலர் அவசரக் கடனைப் பெற்றிருந்தாலும், இந்தக் கடனுக்கான விதிமுறைகளையும் ஆளும்தரப்புக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த கடினமான நேரத்திலும் ஆளும்தரப்பால் சலுகைக் கடனைப் பெற முடியாமல் போயுள்ளது. இந்த வழியில் சென்று ஒரு நாட்டால் முன்னேற முடியாது. தலைதூக்க முடியாது - என்றார்.

## வீடு கழுவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏதேனும் பிழைகள் அல்லது தாமதங்கள் ஏற்பட்டிருந்தால் அவை விசாரிக்கப்பட்டு உடனடியாக சரிசெய்யப்படும் என்று போராட்டக்காரர்களுக்கு உறுதியளித்தார்.

## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் அண்மைய வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த தொடருந்து பாதைகள் மற்றும் பாலங்களை விரைவாகச் சீரமைக்க சீன ஆளும்தரப்பின் ஆதரவையும் அமைச்சர் கோரினார்.

அமைச்சரின் முன்மொழிவுகளை தனது நாட்டின் ஆளும்தரப்புக்குத் தெரியப்படுத்துவார் என்று தூதுவர் அமைச்சரிடம் உறுதியளித்தார். மேலும், 'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட்டு, அனைத்துத் துறைகளிலும் சீனா வழங்கக்கூடிய உதவிகள் குறித்து விரைவில் அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com








# மரண அறிவித்தல்

தோற்றம்

08 . 01 . 1936



மறைவு

28 . 12 . 2025

## திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம்

**(ஓய்வுநிலை அதிபர்–யாழ் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)**
**(தலைவர், நிறுவுனர்-உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி ஸ்மார்ட் கிட்ஸ்)**

கொக்குவிலை பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்கள் கடந்த 28.12.2025 ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், நிரஞ்சன் (கனடா), நிருபா (ஆசிரியர்-அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிரஷாந்தி (கனடா), அருந்தவம் (ஆசிரிய ஆலோசகர்-வலிகாம கல்வி வலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவநீத் (கனடா), பிரஜித் (கனடா), மதுரா (மாணவி- விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரூபிகா (மாணவி - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் செல்வநாயகி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2025) புதன்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பித்து தொடர்ந்து பூதவுடல் உரும்பிராய் கிட்ஸ் பார்க்கில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் வீதி,**
**உரும்பிராய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 8257 881, 076 3989 321**

(CS 28757) A







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2025 வெளியிடப்பெற்றது.